**செ. கு. எண்: 203** **நாள்: 18.11.2018**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின் அறிக்கை - 18.11.2018

'கஜா' புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரடியாக சென்று மீட்பு மற்றும் நிவாரண பணிகளை ஒருங்கிணைக்க கூடுதலாக கீழ்க் கண்ட மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்;-

நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் திரு கே.பி அன்பழகன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. எம்.சி சம்பத் மற்றும் மாண்புமிகு ஊராக தொழில் துறை அமைச்சர் திரு. பா. பென்ஜமின் ஆகியோரும்; தஞ்சாவூர் மாவட்டத்திற்கு மாண்புமிகு பள்ளிக் கல்வி துறை அமைச்சர் திரு. கே.ஏ செங்கோட்டையன், மாண்புமிகு கால்நடை பாராமரிப்புத் துறை அமைச்சர் திரு. உடுமலை ராதாகிருஷ்ணன் மற்றும் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜூ ஆகியோரும், திருவாரூர் மாவட்டத்திற்கு மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. செல்லூர் ராஜூ மற்றும் மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கே டி ராஜேந்திர பாலாஜி ஆகியோரும், புதுக்கோட்டை மாவட்டத்திற்கு மாண்புமிகு சுற்றுச் சூழல் துறை அமைச்சர் திரு. கே. சி. கருப்பணன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. எம்.ஆர் விஜயபாஸ்கர் மற்றும் மாண்புமிகு காதி மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர் திரு. ஜி. பாஸ்கரன் ஆகியோரும் அந்தந்த மாவட்டங்களில் முகாமிட்டு மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை ஒருங்கிணைப்பார்கள்.

**கே. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**